***DEPOSITION OF WITNESS***

**IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, THANJAVUR AT KUMBAKONAM**

| | | |
|---|---|---|
| **MCOP No. 208/2020** | **நாள் – 22.01.2026** | **சாட்சி – ம.சா.2** |

*Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).*

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.குமார் | தந்தை பெயர் | திரு.கலியமூர்த்தி |
| ஊர் | திருப்பனந்தாள் | தாலுக்கா | திருவிடைமருதூர் |
| தொழில் | விவசாயம் | வயது | 53 |

**முதல் விசாரணை:**

நான் மனுதாரர் தரப்பு சாட்சி 2 ஆக சாட்சியம் அளிக்கிறேன். மனுவில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். முதல் நிலை சாட்சியத்திற்கான பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது.

**1ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-**

விபத்தில் இறந்தவர் எனக்கு பழக்கமானவரா என்றால் பக்கத்து கிராமத்தை சார்ந்தவர், எனக்கும் அவருக்கும் பழக்கம் இல்லை. விபத்து நடந்தவுடன் விபத்தில் இறந்தவரின் மகனுக்கு நான் அலைப்பேசி வாயிலாக தகவல் சொன்னேன் என்றால் சரிதான். விபத்தில் இறந்தவரின் மகன் எனக்கு பழக்கமானவர் என்றால் சரிதான். விபத்தை நான் நேரில் பார்த்தேனா என்றால் நான் கடையில் நின்றபோது சத்தம் கேட்டு ஓடிபோய் பார்த்தேன். விபத்தில் அடிப்பட்டவரின் மகன் எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் அவர்களுக்கு இழப்பீடு கிடைக்க வேண்டும் என்பதற்காக மனுதாரர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ஆம்

எதிர்மனுதாரின் வாகனம் வெளி மாநிலத்தின் வாகனம் என்பதால் உண்மைச் சங்கதிகளை மறைத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

*Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2026.01.22 17:20:36 +0530

*Additional Chief Judicial Magistrate,*
Kumbakonam.